## ரபேவ பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

---------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 10 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 11 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரபேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) பேரேட்டில் கணக்குகள் ஒழுங்கு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெற வேண்டிய வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,451,538 தொகையினை அட்டுறு அடிப்படையினை கடைபிடித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்டுள்ள 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 152,765 தொகையினை நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கியிருக்கவில்லை.

(ஈ) ரூபா 5,100,000 இற்கான அலுவலகக் கட்டிடம் ரூபா 75,342 இற்கான அலுவலர் ஆவணப் பதிவகம் மற்றும் ரூபா 1,800,000 இற்கான புது சிற்றுண்டிச் சாலை கட்டிடம் என்பவற்றை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பிட்டுள்ள 02 காணிகள், மற்றும் 07 கட்டிடங்கள், காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) சொத்துக்கள் பட்டோலையின் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 1,159,190 இற்கான 04 மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது முன் கொண்டு வரப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் அல்லது ஆண்டின் போது கொள்வனவு செய்தவைகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 08 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகள் மற்றும் அவை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 14,874,710 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 736,552 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,496,155 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 தொலைபேசி டவர் கட்டணம்

-------------------------------------------------

இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/08 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி / தொலை தொடர்பு டவர்களுக்காக அவற்றின் உயரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 09 தொலைபேசி செலுத்துகை டவர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

2.2.2 முத்திரைக் கட்டணம்

-------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 129(2)(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரைக் கட்டணத் தொகையை இனங்கண்டு பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

----------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 87,542 இற்கான வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் அம் மீதி 2012 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட இலங்கை குடியரசின் (அதி விஷேட) வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தலைவரின் உத்தியோக பூர்வ வாகனத்திற்கான அங்கீகரிக்கப்பட் மாதாந்த எரிபொருள் அளவு 400 லீட்டர்களாகும். அவ் அனுமதித்த வரையறையை மிகைத்து ரூபா 16,560 தொகைக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனித் துணைக் கருவிகள் மற்றும் மென்கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 10 வருடங்களை மிகைத்துள்ள அறவிடப்படாத பதவியணிக் கடன் ரூபா 240,118 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்